கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு Ministry of Education, Ministry of Education, Ministry of Education

கல்வி அமைச்சு

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2024(2025)

**General Certificate of Education (Ord. Level) Examination - 2024(2025)**

*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

தமிழ் மொழியும் இலக்கியமும் **I, II**
**Tamil language and literature I, II**

**22 T I,II**

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- வினாத்தாள் 1 இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. ‘‘பீழை தருவது ஒன்று இல்’’ இங்கு **பீழை** என்பது
   1. நன்மை 2. இன்பம் 3. தீமை 4. துன்பம்

2. ‘‘பீடுடைய கல்வி நலம் பெற்றிருக்கும் வாலிபர் யாம்’’ இங்கு **பீடு** என்பது
   1. கயமை 2. பெருமை 3. சிறுமை 4. பழைமை

3. ‘கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்’ இங்கு **கதி** என்பதன் எதிர்க்கருத்து
   1. நிர்க்கதி 2. துர்க்கதி 3. கடுகதி 4. நற்கதி

4. ‘தூல வடிவில் நின்றும் மறைந்த இலட்சிய புருடர்கள்..’ இங்கு **தூலவடிவு** என்பதன் எதிர்க்கருத்து
   1. நல்லவடிவு 2. தூயவடிவு 3. சூக்குமவடிவு 4. தீயவடிவு

5. ‘உன்னை அடையாட்டிக் காட்டுப்பள்ளி..’ இங்கு **காட்டுப்பள்ளி** என்பது
   1. மயானம் 2. மைதானம் 3. வனம் 4. தோட்டம்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. பின்வருவனவற்றுள் **பொருத்தமற்ற** சொற்களின் இணைப்பு
   1. யானை – பந்தி 2. மக்கள் - கூட்டம் 3. உடு – திரள் 4. மயில் - படை

7. பின்வருவனவற்றுள் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களின் தொகுதி
   1. ஆகாயம், விசும்பு, அடவி
   2. அசுவம், துரகம், புரவி
   3. எழில், வடிவு, விருப்பம்
   4. கேசரி, அரி, பணி

8. அரண்மனையில் மகளிர் தங்குவதற்குரிய தனி இடம்
   1. நிலாமுற்றம் 2. ஓலக்கம் 3. உப்பரிகை 4. அந்தப்புரம்

9. ‘கிடைத்தற்கரிய நூதனமான பொருட்கள் மியூசியத்தில் (**Museum**) வைக்கப்பட்டுள்ளன’ **மியூசியம்** என்பதற்கு நிகராக தமிழில் வழங்கும் சொல்
    1. அருங்காட்சியகம்    2. புகலரண்    3. சுவடிகள்கூடம்    4. காப்பரண்

10. எதிர்ப்பொருள் குறித்த இரு சொற்கள் இணைந்து **அமையாத** இணைமொழி
    1. ஆதிஅந்தம்    2. உள்ளும்புறமும்    3. வாட்டசாட்டம்    4. உயர்வுதாழ்வு

11. ‘இரங்குதல்’ என்பதனைக் குறிக்கும் மரபுத் தொடர்
    1. கண்கலத்தல்    2. கண்ணோடுதல்    3. கண்திறத்தல்    4. கண்வளர்தல்

12. ‘குறுகுறு நடந்து சிறுகை நீட்டி’ என்னும் அருஞ்சொற்றொடர் குறிக்கும் பருவம்
    1. முதுமை    2. விடலை    3. இளமை    4. குழந்தை

13. ‘ஆறின கஞ்சி பழங்கஞ்சி’ என்ற பழமொழி தரும் உட்கருத்து
    1. கஞ்சி ஆறிவிட்டால் பழங்கஞ்சி ஆகிவிடும்
    2. ஆறிப் பழையதான கஞ்சியை யாரும் விரும்பார்
    3. எக்காரியத்தையும் பிற்போடக்கூடாது
    4. கிடைத்த சந்தர்ப்பம் மீண்டும் வராது

14. ‘நெடுநீர்க்குட்டத்து துடுமெனப் பாய்ந்து..’ இங்கு ‘துடும்’ என்னும் சொல் உணர்த்துவது
    1. ஓசை    2. அலட்சியம்    3. அச்சம்    4. விரைவு

15. ‘சேமியா’ என்பது எம்மொழிச் சொல்?
    1. ஒல்லாந்து    2. அரபு    3. பாரசீகம்    4. மராட்டி

16. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
    1. பொன்விழா    2. மணிவிழா    3. பவள விழா    4. அமுதவிழா

17. ‘அம்மா காய் பிஞ்சு வாங்க சந்தைக்குச் சென்றார்’ இங்கு ‘காய் பிஞ்சு’ என்பது எப்பிரதேச வழக்குச் சொல்
    1. கிழக்கு    2. வடக்கு    3. மேற்கு    4. தெற்கு

18. **பொருத்தமற்ற** சொல்லைக் கொண்ட தொகுதி
    1. புலி : போத்து, பிணா, குட்டி    2. குரங்கு : கடுவன், மந்தி, குட்டி
    3. குதிரை : குண்டு, வடவை, குட்டி    4. யானை : களிறு, பிடி, குருளை

19. “தலை இருக்க வால் ஆடக்கூடாது, எல்லாத்துக்கும் ஐயா வரட்டும்” என்பதில் **தலை இருக்க வால் ஆடக்கூடாது** என்பது
    1. மரபுத்தொடர்    2. குறிப்புத்தொடர்
    3. அருஞ்சொற்றொடர்    4. உவமைத்தொடர்

20. ‘கம்பியூட்டர் பரிபாஷையிலேயே பேசப்பழகிக் கொண்டோம்’ இங்கு ‘பரிபாஷை’ என்பது
    1. கணினிப் பேச்சு    2. மறைமுகமான பேச்சு
    3. தெரிந்த பேச்சு    4. நேரடியான பேச்சு

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. பின்வருவனவற்றுள் பகர மெய் ஒலிப்பால் வேறுபட்ட வகையில் இடம்பெறும் சொல்
    1. அப்பம்    2. பருந்து    3. கோபம்    4. பட்டம்

22. பின்வருவனவற்றுள் தொழிற்பெயர் விகுதி பெற்று வந்த சொல்
1. நன்மை 2. தேட்டம் 3. கூத்தன் 4. செய்யும்

23. ‘இ’ எனும் இடைநிலை பெற்று வந்த சொல்
1. ஓடினான் 2. ஓடுகின்றது 3. ஓடுவான் 4. ஓடியது

24. ‘ஐ’ உருபு நீத்தல் பொருளில் வந்த தொடர்
1. புகைத்தலைக் கைவிட்டான் 2. கட்டுரையை எழுதினான்
3. மரத்தை வெட்டினான் 4. வீட்டை அடைந்தான்

25. ‘மனவேதனை’ என்பதில் இடம்பெற்ற புணர்ச்சி
1. இயல்பு 2. திரிதல் 3. கெடுதல் 4. தோன்றல்

26. ‘சுடுசரம்’ என்பது
1. பண்புத்தொகை 2. வினைத்தொகை
3. வேற்றுமைத்தொகை 4. உம்மைத்தொகை

27. ‘உங்கள் வாழ்வில் இன்பம் மலரட்டும்’ என்பதில் ‘மலரட்டும்’ என்பது
1. வியங்கோள்வினை 2. ஏவல் வினை 3. தன்வினை 4. செய்வினை

28. அகராதி ஒழுங்கில் **அமையாத** சொற்றொகுதி
1. கதவு, சடங்கு, தடாகம், பட்டம் 2. மரபு, மாடம், மிளகு, மேடை
3. படகு, கடல், நறவு, துரும்பு 4. கடினம், சக்கரம், தர்மம், நண்பன்

- **29, 30 ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உதாரணங்கள் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க**

29.
1. உவமைத்தொகை - மதிமுகம், பால்நிலவு, பிறைநுதல்
2. பண்புத்தொகை - முழுநிலவு, கருமுகில், வளர்பிறை
3. அகப்புணர்ச்சி - நாங்கள், அவர்கள், மரங்கள்
4. ஏவல் வினை - நடவுங்கள், படியுங்கள், செய்யுங்கள்

30.
1. செய்வினை - எழுதினான், பாடினான், படித்தான்
2. தன்வினை - ஓடினான், எழுதினேன், பறந்தன
3. பிறவினை - உருட்டினான், படிப்பித்தான், செய்வித்தான்
4. எச்சவினை - பாய்ந்து, விழுந்து, வந்தான்

- **புள்ளிக்கோடிட்ட இடத்தினை நிரப்புவதற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. அத்தியாவசிய சேவை ஆணைக்குழு அமைப்பதற்கான ............................ பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
1. பரிந்துரை 2. பிரேரணை 3. முன்மொழிவு 4. மனு

32. நூல் ஒன்றிற்கு நூலாசிரியர் அல்லாத வேறு ஒருவரால் ............................ வழங்கப்பட்டது.
1. முன்னுரை 2. பதிப்புரை 3. அணிந்துரை 4. விரிவுரை

33. இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகரான இலங்கை ரூபாவின் ............................ விகிதத்தை அறிவித்தது.
1. செலாவணி 2. பிணைமுறி 3. வட்டி 4. நாணயமாற்று

34. சிறுவரது உரிமைகள் பாதுகாக்கப்படும் என அரசியல் யாப்பில் …………… அளிக்கப்பட்டுள்ளது.
   1. விதிமுறை   2. உத்தரவாதம்   3. நிபந்தனை   4. உத்தேசம்

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க**

35. கூடையில் உள்ள ஒவ்வொரு ……………………
   1. பழமும் நல்லது   2. பழமும் நல்லவை
   3. பழங்களும் நல்லது   4. பழங்களும் நல்லவை

36. சுயநலமும் பொறாமையும் நன்மை ………………………
   1. பயப்பதன்று   2. பயப்பனவாகும்   3. பயப்பனவல்ல   4. பயப்பதில்லை

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

இலவின் காய் போலும் செக்கச்
செவேலென இருக்கும் மூக்கும்
இலகிடு மணல் தக்காளி
எழில்ஒளிச் செங்காய்க் கண்ணும்
நிலைஒளி தழுவும் மாவின்
நெட்டிலை வாலும் கொண்டாய்
பலர் புகழ்கின்ற பச்சைப்
பசுங்கிளி வாராய்! வாராய்!

37. இப்பாடலில் வர்ணிக்கப்படுவது யாது?
   1. பச்சைக் கிளி   2. இலவங்காய்   3. தக்காளி   4. மாமரம்

38. ‘மாவின் நெட்டிலை வாலும் கொண்டாய்’ என்ற தொடர் மூலம் உணர்த்தப்படுவது
   1. நீண்ட கிளை   2. மாவின் இலை   3. நீண்ட வால்   4. உயர்ந்த கிளை

39. ‘இலவின் காய்’ என்பது எதற்கு உவமிக்கப்பட்டுள்ளது?
   1. கண்   2. மூக்கு   3. வால்   4. கால்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ. தமிழில் அகராதி தோற்றம் பெற பாதிரிமார்கள் காரணமாக இருந்தனர்.

ஆ. வீரமாமுனிவரின் சதுரகராதியே முதன் முதலில் தமிழில் தோற்றம் பெற்ற அகராதியாகும்.

இ. அரிச்சுவடியிலுள்ள எழுத்து முறைப்படி சொற்களை அமைப்பது தான் அகராதி முறை

ஈ. தமிழ்மொழி வளர்ச்சியடைவதற்கு அகராதி இன்றியமையாததாகையால் அகராதிகளை இயற்றுவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளவேண்டும்.

உ. இவ்வகராதிகளில் கடினமான சொற்கள் மட்டுமன்றி சாதாரண மக்கள் பயன்படுத்தும் சொற்களும் இடம்பெற்றன.

   1. உ, ஈ, அ, ஆ. இ   2. உ, இ, அ, ஆ, ஈ
   3. இ, அ, ஈ, ஆ, உ   4. இ, உ, அ, ஆ, ஈ

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு
Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of

கல்வி அமைச்சு
தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2024(2025)
**General Certificate of Education (Ord. Level) Examination - 2024(2025)**

தமிழ் மொழியும் இலக்கியமும் **II**
**Tamil language and literature II**

**22 T II**

**கவனிக்குக.**
- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- ❖ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**1. சுருக்கமான விடை எழுதுக.**

I. பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
‘‘மானமே புரப்பத் தவனிமே லெவர்க்கும்’’

II. ‘‘துன்புறுவோரின் காற்தூசியையும் கழுவிவிடும் அன்பின் ஊற்று’’, இத்தொடரின் எழுவாய் பயனிலை என்பவற்றைக் குறிப்பிடுக.

III. பின்வரும் வாக்கியத்தை பொருத்தமான நிறுத்தக்குறிகள் இட்டு எழுதுக.

வினுக்குட்டிக்கு அம்மா இன்னும் வரலையே இனி வந்திடுவா என்ன என்று சொல்லிவிட்டுப் போனான்

IV. ‘நீளும்’ எனும் சொல் எச்சமாகவும் முற்றாகவும் வரக்கூடியவாறு வாக்கியம் அமைக்குக.

V. ‘‘அடுத்த வருடம் தமிழாராய்ச்சி மாநாடு இலங்கையில் நடைபெறும்’’. இவ்வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.

VI. ‘மலையருவி’, ‘வெண்புறா’ என்பவை எவ்வகைத் தொகைகளாகும்?.

VII. ‘இருதலைக்கொள்ளி’ எனும் மரபுத்தொடர் தரும் பொருள் யாது?

VIII. பின்வருவனவற்றுள் தற்பவமாய் அமைந்த சொற்களைத் தெரிவு செய்க.
அனுகூலம், புருடன், காரணம், அனுமான்

IX. அறிவுடையவர்கள் தம்மை புகழ்ந்து பேச மாட்டார்கள்.

கல்லாதவர்கள் தம்மைத்தாமே புகழ்ந்து பேசிக் கொண்டே இருப்பார்கள்.

இவ்விரு வாக்கியத்தையும் பொருத்தமான **இணைப்பிடைச் சொல்லைப்** பயன்படுத்தி இணைக்குக.

x. ‘அந்த பலாமரத்திலுள்ள ஒவ்வொரு கனிகளும் சுவையானதாக இருந்தன.’ மேற்குறிப்பிட்ட வாக்கியத்தை வழு நீக்கி, எழுதுக.

(2x10 = 20 புள்ளிகள்)

**2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலைப்பிடுக.**

அ. ''எமது நாடு அண்மையில் முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் பல்வேறு துறைகள் அபிவிருத்தியில் பின்னடைந்துவிட்டன. இந்நிலையிலிருந்து மீட்டெடுக்க எதிர்கால சந்ததியினராகிய எமக்கு விவசாயம் மற்றும் கைத்தொழில்களில் ஈடுபட வேண்டிய கடமையும் பொறுப்பும் உரியதாகும்''. இக்கருத்துக்களை உள்ளடக்கி ஒரு **விளக்கக்கட்டுரை.**

ஆ. இன்றைய உலகில், மனிதன் பல்வேறு சமூக ஊடகங்கள் வாயிலாக இன்னோரன்ன பயன்களைப் பெற்றுக்கொள்கின்றான். இவை மனிதவாழ்வின் இன்றியமையாத ஓர் அங்கமாகத் திகழ்கின்றன. எனினும், பல்வேறு நபர்களால் இவை தவறான முறையில் பயன்படுத்தப்படுவதனால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படுகின்றன. எனவே, சமூக ஊடகங்களின் நன்மை, தீமைகளை வலியுறுத்தி இருவருக்கிடையிலான ஓர் **உரையாடல்.**

இ. இன்றைய சிறுவர்களின் எதிர்கால வாழ்வை சீர்குலைக்கும் வகையில் போதைப்பொருள் பாவனையானது அதிகரித்து வருகின்றது. இவற்றால் இன்றைய இளந்தலைமுறையினர் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கும் அதேவேளை அவர்களை சார்ந்தோரும் இன்னோரன்ன பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பாக, விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாணவர் மன்றத்தில் நீங்கள் நிகழ்த்தும் **மேடைப் பேச்சு.**

ஈ. குமார் அடிக்கடி தனியாகப் பேசுகிறான். அவன் கைகள் ஏதோ ஒன்றினை வைத்திருப்பது போல் தானாக அசைகின்றன. கண்கள் தெளிவில்லாமல் போய்விட்டன. வைத்தியர்களோ அவனது மனநிலை பாதிக்கப்பட்டுவிட்டதாகக் கூறி கைவிரித்துவிட்டனர். இந்தக் கொடுமைகளை எல்லாம் பார்த்து கைபேசி வாங்கிக் கொடுத்ததை எண்ணிக் கண்ணீர் விடும் பெற்றோரின் கனவுகள் கண்ணீரில் கரைகின்றன… என்றவகையில் அமையுமாறான **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**3. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

இலங்கைத் தொலைக்காட்சி சேவையில் அன்றாட செய்திகள், அறிவியல், கலை நிகழ்ச்சிகள், விளக்கத் திரைப்படங்கள், தொடர்கள், இசை, நாட்டியம், நாடகம், திரைப்படங்கள் போன்ற நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. இவை தவிர நிபுணர்களின் உரைகள், கலந்துரையாடல், வேளாண்மை, கிராம வளர்ச்சி, உடல்நலம், குடும்ப நலம், சுற்றுச் சூழல், நுகர்வோர் உரிமை பற்றிய தகவல்களும் ஒளிபரப்பாகின்றன.

கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள், முறைசாராக் கல்வி நிகழ்ச்சிகள், பல்கலைக்கழக மானியக்குழு வழங்கும் வகுப்பறை நிகழ்ச்சிகள், தேசிய கல்வி நிறுவகமும் கல்வி அமைச்சும் இணைந்து வழங்கும் கல்வி சார் நிகழ்ச்சிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற, சிறப்பு நிகழ்ச்சிகள் ஆகியவை இடம் பெறுகின்றன.

தொலைக்காட்சியால் பல எதிர்மறை விளைவுகள் உள்ளன. வெளிநாட்டுத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தமிழர் பண்பாட்டுக்கு இணையாக இல்லை. பாலுணர்வு, வன்முறை நிகழ்ச்சிகள் அதிகமாக இடம் பெறுகின்றன. இதனால் இளைஞர்கள், சிறுவர்கள் வழிதவற வாய்ப்பு உள்ளது. தொலைக்காட்சி தொடர்கள், மூடநம்பிக்கைகளையும், போலிப் பழக்க வழக்கங்களையும் குடும்ப சண்டைகளையும் பெரிதுபடுத்துகின்றன. நிகழ்ச்சிகள் இடையே விளம்பரங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இதன் வரவால் திரைப்படத்துறையும் பத்திரிகைத் துறையும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. மதுபானம், சிகரெட், பான்மசாலா இவை பற்றிய விளம்பரங்கள் இலங்கைத் தொலைக்காட்சி சேவையில் தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால் கேபிள் தொலைக்காட்சிகளில் தடை செய்யப்படவில்லை. எனவே எதிர்மறை விளைவுகள் அதிகமாக உள்ளன.

(10 புள்ளிகள்)

**4. பின்வரும் உரைநடைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

நீர்வேலியில் சங்கரபண்டிதர். அவருக்கு முன்னமே திருநெல்வேலியில் உள்ளவர் ஞானப்பிரகாச முனிவர். இவர்கள் தமிழிலேயன்றி சமஸ்கிருதத்திலும் மகாமேதைகள். தருக்கக்கோடரிகள். இவர்களையும் இவர்கள் வழியைப் பின்பற்றியவர்களையும் சொல்வதற்கு பண்டிதர்கள் என்று மற்றொரு வரிசையை எடுத்துக் கொள்ளலாம். வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை நாவலரின் மருகர். இலக்கிய ரசனையில் ஈடும் எடுப்பும் இல்லாதவர். அவர் இலக்கிய இரசத்தை சொட்டிக் கொண்டிருந்தார் என்று சொல்லுதல் தகாது. தாரைத் தாரையாகப் பொழிந்து கொண்டிருந்தார் என்றே சொல்ல வேண்டும் உரை நயம் சொல்லுகின்ற உரையாசிரியர்கள் வகுப்பிலேதான் அவரையும் அவர் வழி வந்தவர்களையும் வைத்து சொல்லலாம். சமீபத்தில் வாழ்ந்து போன மகாலிங்கசிவம் கற்பனா சக்திக்கு ஊற்றான ஓர் இனித்த உபநியாசகர். அவரைப்பற்றி சொல்லுதற்கு அவருக்கென்றே தனித்த இடம் வேண்டும். சுவாமி விபுலானந்தர் கவித்துவம் வாய்ந்த இனிய புலவரேயாயினும் அவருடைய விஷேட ஆற்றல்கள் பற்றி அவருக்கு வேறு இடம் கொடுக்க வேண்டும். தெல்லிப்பளை வித்துவான் சிவானந்தையரின் 'கூரிய விவேகம்', புலோலி கதிர்வேற்பிள்ளையின் 'மகா திறமை' தனித்தனிப் பெருமைக்கு உரியவை. இன்னும் எத்தனையோ மதிநுட்பம் வாய்ந்தவர்கள் - தமிழ்ப்பணி செய்தவர்கள் இருக்கின்றார்கள். ஆறுமுகநாவலரின் தனிப்பெருமை பிரசித்தமானது. இங்கே பெயர் குறித்து சொன்னவர்களும் குறிப்பிடாமல் உணர வைத்தவர்களும் ஆகிய எல்லோரும் ஈழ மண்டலத்தின் அறிவுக் கண்கள் தவப் புதல்வர்கள். இவர்கள் ஒவ்வொருவரையும் தமிழ் மாணாக்கர் தெரிந்திருத்தல் வேண்டும்.

1. சங்கரபண்டிதர், ஞானப்பிரகாச முனிவர் ஆகியோரின் சிறப்புகள் யாவை?
2. 'தருக்கக்கோடரிகள்' என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
3. 'சங்கரபண்டிதர், ஞானப்பிரகாச முனிவர் ஆகியோரின் வழியைப் பின்பற்றிய வேறு பண்டிதர்கள்' எனக் கட்டுரையாசிரியரால் சிறப்பிக்கப்படும் இருவரின் பெயர்களைத் தருக?
4. வித்துவ சிரோமணி பொன்னம்பலப்பிள்ளையின் ஆளுமை எத்தகையது?
5. 'இலக்கிய இரசத்தை சொட்டிக் கொண்டிருந்தார்' எனும் தொடரின் மூலம் உணர்த்தப்படுவது யாது?

(2x5 = 10 புள்ளிகள்)

5. மணல்தீவுப் பிரதேசத்தின் நீரூற்று கிராமத்துக்கு அண்மையில் வசிக்கும் பிரதேச வாசிகள் தங்கள் வீட்டுக் கழிவுகளை வீதியில் ஆங்காங்கு வீசிவிட்டுச் செல்கின்றனர். இதனால் அந்த பிரதேச வாழ் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இவ்விதம் குப்பைகளை வீசிவிட்டு செல்வோர் தொடர்பில் முறையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கழிவுகள் முறையாக முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி மணல்தீவுப் பிரதேச சுகாதாரப் பரிசோதகர் அ.தமிழினியனுக்கு நீரூற்று கிராம நலன்புரிச் சங்கத் தலைவர் கி.நெடுமாறன் என உம்மைக் கருதி 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

- நீரூற்றுக் கிராமச் சூழல் மாசடைவதற்கான காரணங்கள்
- அதனால் ஏற்படவுள்ள பாதிப்புகள்
- அவற்றைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

அல்லது

கிராமங்களில் வாழும் மக்கள் சுயதொழிலாகப் பல்வேறு கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். இவ்விதம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளை ஏனையோர் கொள்வனவு செய்து குறித்த உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டும். பொருத்தமான சந்தை வாய்ப்பும் அவர்களுக்கான மானியங்களும் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பத்திரிகைச் செய்தி ஒன்று எழுதுக.

- கிராமிய மக்களின் உற்பத்திகள்
- பிறர் கொள்வனவு செய்வதால் ஏற்படக் கூடிய நன்மைகள்
- உற்பத்தியாளர்களுக்கு வழங்கக்கூடிய ஊக்குவிப்புகள்

(15 புள்ளிகள்)

கல்வி அமைச்சு
தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்வி அமைச்சு Ministry of Education

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2024(2025)
**General Certificate of Education (Ord. Level) Examination - 2024(2025)**

*இரண்டு மணித்தியாலம்*
***Two hours***

தமிழ் மொழியும் இலக்கியமும் III
**Tamil language and literature III**

**22 T III**

**அறிவுறுத்தல்கள் :**
- அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**01. சுருக்கமான விடை தருக.**

I. “அது இப்படிக் காலைவாரியும் எனக்குப் புத்திவரவில்லை”
i. இங்கு ‘அது’ எனச் சுட்டப்படுவது எது?
ii. ‘காலை வாருதல்’ என்ற மரபுத்தொடர் மூலம் உணர்த்தப்படும் விடயம் யாது?

II. பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்கின்ற ‘பிறகு’ அந்த சபையில் நிலவியது.
i. இங்கு ‘பிறகு’ என்பதன் மூலம் உணர்த்தப்படும் விடயம் யாது?
ii. சண்ட மாருதம் என்பதன் கருத்து யாது?

III. “வானமுட்ட ஏலேலோ, நிற்கிறானே ஐலசா
ஓடி ஓடி ஏலேலோ, இழுக்கவேணும் ஐலசா”
i. இங்கு எதனை இழுக்கவேணும் என்று கூறப்படுகின்றது?
ii. இங்கு இடம்பெற்றுள்ள ஒலிக்குறிப்புச் சொல் ஒன்று தருக.

IV. “பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல்”
i. இங்கு குறிப்படப்படும் பேதையர் செயல் யாது?
ii. ‘காதன்மை’ என்பதன் கருத்து யாது?

V. “உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினுஞ்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்…”
i. இங்கு ‘உயிர்’ என சுட்டப்படுவது யாருடைய உயிர்?
ii. செயிர் என்பதன் கருத்து யாது?

VI. “இந்த மூத்தம்மாவை நினைக்கையில் நெஞ்சில் உவகை நிறையும். சுருக்கம் விழுந்தாலும் என்ன மிடுக்காய் நடக்கிறா…”.
i. இவ்வாறு கூறியவர் யார்?
ii. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மூத்தம்மாவின் இயல்பு யாது?

VII. “இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகனாயலன்”
i. இங்கு புலவர் வணிகன் என யாரைச் சுட்டுகின்றார்?
ii. இம்மை என்பதன் கருத்து யாது?

VIII. “தந்தை கட்டிய கூடு…… புறாக்குஞ்சுகளைப் போல வளர்த்தார்”
i. புறாக்குஞ்சுகளைப் போல வளர்த்தவர் யார்?
ii. வளர்க்கப்பட்டவர்கள் யாவர்?

IX. “பாத்துண்ணுந்
தன்மையிலாள ரயலிருப்பு மிம் மூன்று…”
i. ஒருவருக்கு நன்மை தாராத விடயமாக இங்கு குறிப்பிடப்படுவது யாது?
ii. பாத்து என்பதன் கருத்து யாது?

X. ‘‘கன்னன்மொழி கேளாது கஞ்சமுக நோக்காது
மன்னிலத்து வாழேன் மடிந்திடுவன்..’’

i. இங்கு காதலி மீதான காதலனின் அன்பு எவ்வாறு வெளிப்படுகின்றது?

ii. காதலியின் முக அழகு எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?

(20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

I. நீரெ டுத்து வருதற் கவள்மணி
நித்தி லப்புன் னகைசுடர் வீசிடப்
போரெ டுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை யதற்குத் தினந்தொறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீந்திடச் செய்தல் வேண்டிய மன்னர்தம்
சீரெ டுத்த புலையியற் சாரர் கள்
தேச பக்தர் வரவினைக் காத்தர் போல.

i. கவிஞன் காதலி மீது கொண்ட ஈடுபாட்டை விளக்குக.

ii. அக்கால நாட்டு நிலைமையினை விளக்குக.

II. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவற் கிருக்க நிழலா காதே
தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே
அதனால்
பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம்
சிறியரு மல்லர்

i. பனை, ஆலமரம் என்பவற்றுக்கிடையிலான வேற்றுமைகளை விளக்குக.

ii. பனை மற்றும் ஆலமரத்தின் வேறுபாடு மூலம் புலவர் கூறவந்த விடயத்தினை விளக்குக.

III. மூத்தோன் மற்று இவை உரைப்ப இளையோன்
வெஞ்சினம் மனதிலே மூளமூள
நாத் தோம் இல் உரை பதறக் கதுமென உற்று
எழுந்து இறைஞ்சி ஞாலம் எல்லாம்
பூத்தோனே பூந்தவிசில் பூவை புணர்
மணி மார் பா புன்மை யாவும்
தீர் த்தோனே ஊனம் இலான் மானம் இலாது
உரைப்பதற்கு என் செய்வது என்றான்.

i. கோபத்தினால் வீமனிடத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விபரிக்குக.

ii. வீமன், தர்மன் மேல் கொண்ட வெறுப்பு எவ்வாறு வெளிப்படுகின்றது?

IV. இப்போது சினிமா மொழி நமக்குப் பரிச்சயமில்லாத ஒன்றாக இருக்கிறது. மற்ற நாடுகளில் இம்மொழி வளர்ந்துகொண்டிருக்கிறது. அங்கிருந்து வரும் நல்ல சினிமாவை நாம் அனுபவிக்க முடியாததற்கு நம் பரிச்சயமின்மைதான் காரணம். சினிமா மொழி, மொழிபெயர்க்க முடியாத ஒன்று, அது மனித குலத்திற்கே பொதுவானது. அதுதான் சினிமாவின் சக்தியும்கூட. சினிமாவைப் பற்றி இந்த விழிப்பு ஏற்படாத வரை, நாம் சினிமாவைப் புலனளவில் மட்டுமே அணுகுவோம். அறிவுபூர்வமாகவும் அணுக வேண்டும். அந்த அனுபவம் ஆழமானதொன்றாக அமைய வேண்டும்.

i. சினிமா மொழியின் இயல்புகளை விளக்குக.

ii. “நாம் சினிமாவைப் புலனளவில் மட்டுமே அணுகுவோம். அறிவுபூர்வமாகவும் அணுக வேண்டும்” என்பதன் மூலம் கட்டுரையாசிரியர் கூறவந்த விடயத்தினை விளக்குக.

V. மக்களின் நலத்தைக் கருதும் பண்பு, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்னும் தன்மை இச்சிறப்பை மேலும் வளர்த்தது. இம்மனப்பான்மை வட ஆரியர், கிரேக்கர் போன்றோருடைய பண்டைக் கொள்கைகளுடன் முரண்பட்டேயிருந்தது. பிளேட்டோ, அரிஸ்டோட்டல் போன்றோர் கிரேக்கர் மட்டுமே உயர்ந்தவர்கள் என்றும், பிற மக்களை நாகரிகம் அற்றவர்கள் என்றும் கூறிவந்தனர். வட ஆரியர் இமய மலைக்கும் விந்தியமலைக்கும் இடையேயுள்ள நிலந்தான் புண்ணிய பூமி என்று கருதினர்.

i. கிரேக்கர் மற்றும் வட ஆரியரின் பண்டைய கொள்கைகளைக் குறிப்பிடுக.
ii. அவை எவ்வாறு தமிழர் கொள்கைக்கு முரணாக உள்ளது என்பதை விளக்குக.

(20 புள்ளிகள்)

03. கம்பராமாயணம் - குகப்படலத்தில்
I. கம்பன் கையாண்டுள்ள உவமை, உருவகங்களின் பொருத்தப்பாடு
II. இராம இலக்குவணர்களின் சிறப்பு
என்பவற்றை விளக்குக.

**அல்லது**

தத்தைவிடு தூதில்
I. காதலி பற்றிய வருணனையில் காணப்படும் சிறப்புகள்
II. காதலியின் பிரிவால் காதலன் அடையும் துயர்
என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

04. கம்பியூட்டர் - என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு
I. கம்பியூட்டர் வருகையால் கதைசொல்லியின் குடும்பத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்
II. கதைசொல்லிக்கு கணிப்பொறி மீது ஏற்பட்ட வெறுப்பும் விருப்பும்
என்பவற்றை விளக்குக.

**அல்லது**

இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு, இலட்சியவாதிகளுக்கு இலட்சியத்தைவிட வேறு எதுவும் பெரிதில்லை என்பதை பின்வரும் இலக்கியப் பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
I. குறுந்தொகைத் தலைவி
II. அருச்சுனன்
III. அரிச்சந்திரன்

(15 புள்ளிகள்)

**5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கு மட்டும் விடை எழுதுக.**

05. எது நல்லசினிமா? என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,
I. தமிழ் சினிமாவில் காணப்படும் நாடகப் பண்புகள்
II. அதற்கான காரணங்கள்
என்பவற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

06. தனிப்பாடல்களில்
I. ஆடிக்குடத்தடையும்… என்ற பாடலில் பாம்பிற்கும் எள்ளுக்கும் புலவர் காட்டும் ஒப்புவமைகளை எடுத்துக்கூறி விளக்குக.
II. பங்கப் பழனத் துழுமுழவர்…. என்ற பாடலில் சோழநாட்டின் வளச்சிறப்பு வெளிப்படும் விதத்தை விளக்குக.

(10 புள்ளிகள்)

07. குழந்தையென எனது மனம் குதூகலிக்கும் - என்ற கவிதையில்
I. முல்லை
II. மருதம்
ஆகிய நிலங்கள் பற்றிய நுட்பமான வருணனைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)